**தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

---

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக

உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 278,475 தொகையான மீண்டெழும் செலவினம், மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக அந்தப் பெறுமதியில் ஆண்டின் பற்றாக்குறை குறைத்தும் மற்றும் நிலையான சொத்துக்கள் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன. | இந்த கணக்கீட்டு தவறையும் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடலின் போது ஏற்பட்ட எழுதுனரின் தவறாகும். எதிர்காலத்தில் இவ்வாறான எழுது வினைஞரின் வழுக்கள் ஏற்படாமைக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மூலதன செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,517,264 பெறுமதியான 6,656 பிலாஸ்டிக் குடைகள் இறுதி இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்படாமல் நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள பிளாஸ்டிக் குடைகளின் பெறுமதி நடைமுறைச் சொத்தாக சமர்ப்பிப்பதற்கும், அந்த எஞ்சியுள்ள இருப்புக்கள் உரிய அமைச்சிலிருந்து கிடைத்த மானியங்கள் பிற்போட்ட வருமானம் ஒன்றாக கருதி நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | இறுதி இருப்புகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம், உரிய பட்டோலைகளுடன் இணக்கஞ் செய்யும் போது இரண்டு வருமான விடயங்களுக்குரிய ரூபா 771,238 இணக்கமின்மை காணப்பட்டது. | ஒவ்வொரு பிரிவுகளின் மூலம் பேணப்பட்டு செல்லப்படுகின்ற வருமான பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட வழுக்களின் காரணமாக அந்த பதிவேடுகளை பிழையானது என குறிப்பிடுகின்றோம். அதன் பிரகாரம் அந்த பதிவேடுகளை சரி செய்யுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறான | நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி நேரொத்த பட்டோலைகளின் பிரகாரமான பெறுமதிகளுடன் சீராக்கப்பட வேண்டும். |

வழுக்களை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடவேண்டிய ரூபா 479,348 கூட்டுத்தொகையான விஷேட முற்பணம் மற்றும் இடர் கடன் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அறவிடப்படாத மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான கால வீச்சில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,082,708 கூட்டுத் தொகையான அறவிட வேண்டிய 06 மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மகாவலி அதிகாரசபையில் இருந்து கிடைக்க வேண்டிய பணம் அறவிட முடியாத மீதியாக இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று விவசாய அமைச்சின் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடும் இயலுமையொன்று காணப்படாமையினால் அறவிடுவதற்கான இயலுமை காணப்படவில்லை.இந்த மீதிகளையும் எதிர்காலத்தில் அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான கால வீச்சில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 926,551 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய 06 மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செலுத்த வேண்டிய கணக்குகளாக குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளை தொடர்ந்தும் பொறுப்பாக வைத்துக்கொள்வது தேவையற்றிருந்தமை இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபையிலிருந்து தற்போது பொது வருமானத்திற்கு செலவில் வைப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | செலுத்த வேண்டிய மீதிகளைச் செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| I | நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104 | மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது திடீர் விபத்துக்களுக்கு உட்பட் இரண்டு வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில் லை. | நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104 இன் பிரகாரம் வாகன விபத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| II | நிதிப் பிரமாணம் 571 | ரூபா 544,109 கூட்டுத்தொகையான காலாவதியான 04 வைப்புக்கள் | கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட முறையில் ரூபா 544,109 தொகையான | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்பு நிறுவனத்திற்கு சொந்தமாக இல்லாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணம் மற்றும் கேள்வி வைப்பாக ரூபா 634,187.03 கூட்டுத் தொகையொன்று உள்ளதுடன், அதில் ஒரு பகுதி இந்த ஆண்டில் தற்போது மீளச் செலுத்தப்பட்டுள்ளது. மிகுதிகளும் செலுத்துவதற்கு காணப்படுகின்ற மீதியாக இருந்தமையும், அவை காலாவதியாக இல்லாதிருந்தமையையும் குறிப்பிடுகின்றோம். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| II ஆவது தொகுதியின் 13.2 ஆம் பந்தி | நிறுவனத்தின் கணக்கு பிரிவில் சேவையாற்றுகின்ற முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் பதிவேடுகளை மாற்றி ரூபா 787,932 தொகையொன்று மோசடி செய்யப்பட்டிருந்தமை 2019 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்ப விசாரணை அறிக்கை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறுவனத்திற்கு | நிதி மோசடி தொடர்பாக ஆரம்ப விசாரணை தற்போது முடிவடைந்துள்ளதுடன், இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது என குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வழங்கப்பட்டிருக்கவில்
லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,719,340 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 19,153,413 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 14,434,073 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் வழங்கல் மற்றும் நுகர்வுச் செலவினம் மற்றும் ஏனைய செலவினங்களில் ரூபா 16,813,823 குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் நடைமுறைச் சொத்து விகிதம் 1:1.22 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அது 1:1.4 ஆக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாய பயிர்ச் செய்கைகளில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைத்தல் நிறுவனத்தின் பிரதான நோக்கமாக இருந்ததுடன், அதற்காக 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனையின் பிரகாரம் காலந்தாழ்த்த முடியாத விவசாய போகங்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்பீடு 30 சதவீதத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 10 வருட காலம் கடந்திருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு வரையில் அந்த அறுவடைக்குப் பிந்திய இழப்பீடுகள் குறைக்கப்பட்ட அளவின் சதவீதம் எவ்வளவு என இனங்காணக் கூடிய வகையில் தரவு தொகுதியொன்று நிறுவனத்தில் காணப்படவில்லை. | இதற்கான ஆராய்ச்சி 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் பொருளாதார ரீதியில் நன்மை தருகின்ற பத்து விவசாய போகங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த போக பயிர்ச்செய்கையாக வாழை, பப்பசாசி, மா, கொய்யா போன்ற பழங்களும் கறிமிளகாய், கத்திரிக்காய், தக்காளி, பாகற்காய் மற்றும் கோவா போன்ற மரக்கறிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. | அறுவடைக்குப் பிந்திய இழப்பீடுகளை குறைக்கும் அளவு எவ்வளவு என இனங்காணக் கூடிய வகையில் தரவு முறைமையொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தில் அமுல்படுத்தப்பட்ட பழங்களை பழுக்கவைக்கும் சேதன முறைமையை இனங்காணும் ஆராய்ச்சியில் (Induction of fruit ripening by organic methods) கண்டறிவதற்காக பேடன்ட் உரித்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் ஆராய்ச்சியின் பெறுபேறுகளை வணிக மட்டத்தில் பரவலாக்குவதற்காக ரூபா 9,572,715 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த செயற்திட்டம் செயற்படு நிலையில் காணப்படவில்லை. | சேதன முறைமையின் மூலம் பழங்களை பழுக்கவைத்தல் (Induction of fruit ripening by organic methods) என்ற ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக பழ வகைகளை நட்டும் செயற்பாடுகளுக்குரிய அத்தியவசிய ஆய்வுகூட பகுப்பாய்வு நடவடிக்கைகள் சிலவற்றிற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக இந்த பணம் செலவிடப்பட்டிருந்தது. பெறுபேற்று பகுப்பாய்வின் பின்னர் அந்த பெறுபேறுகளை வணிக பயன்பாட்டிற்காக சமூக மயப்படுத்துதல் ஆராய்ச்சின் ஒரு நோக்கமாகும். ஆராய்ச்சி விளைவுகளின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட சேதன திட்ட முறைமையின் மூலம் (மரத்தின் இலைகளைக் கொண்டு பழங்களை பழுக்கவைத்தல்) பழுக்கவைக்கப்படுவைகளில் எத்திலின் வாயு உருவாகாதிருந்தமையும் இயற்கையான பழங்களில் இருந்து எத்திலின் உருவாகின்ற செயற்பாட்டினால் பழுக்கவைத்தல் இந்த மர இலைகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. இது புதிய கண்டுபிடிப்பாக இருந்ததுடன், இது சார்ந்த 03 ஆராய்ச்சி வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (இ) | ஆராய்ச்சி செயற்பாடுகளின் பின்னர் புதிய உருவாக்கப்பட்ட பொறிமுறை உற்பத்திகளை சமூக மயப்படுத்ததல் தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவின் பிரதான நோக்கமொன்றாக இருந்த போதும் 2000 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை புதியதாக உருவாக்கப்பட்ட 19 பொறிமுறைகளில் 18 | புதிய பொறிமுறை உருவாக்கம் ஆராய்ச்சிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அது செயற்படு தன்மையான ஆராய்ச்சியின் மூலம் பகுப்பாய்வு செய்யும்போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. உற்பத்தி பொறிமுறைகளை சமூக மயப்படுத்தும் போது அவைகளை விரைவாக குறித்த முறையில் | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறிமுறைகள் சமூகமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமுல்படுத்த வேண்யிருந்ததுடன், அந்த மட்டத்தில் பொறிமுறைகளைக் கொண்டு அதற்காக சிறிது காலம் எடுக்கின்றது. அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட பொறிமுறைகள் தொடர்பாக பொறியியல் சேவை பிரிவின் மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| (ஈ) | பொறியியல் பிரிவினால் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட அறுவடைக்குப் பிந்திய பொறிமுறைகளை அமுல்படுத்துதல் தொடர்பாக NVQ 3 மற்றும் 4 மட்டங்களின் சான்றிதழ் பத்திர பாடநெறி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 770,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், பாடநெறியின் விடயப் பரிந்துரைகளை தயாரித்தல் மற்றும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 178,062 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.<br>மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் 2018 முடிவடைவதற்கு முன்னர் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | அரிசி ஆலைகளில் பொறி முறை செயற்படுத்துநர்களுக்காக முறையான பயிற்சி பாடநெறியொன்றை தயாரித்தல் இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். அதன் பிரகாரம் தேசிய பயிலுனர் மற்றும் தொழிலநுட்ப பயிற்சியளித்தல் அதிகார சபையுடன் இணைந்து பாட நெறி தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த பாடநெறி தயாரிக்கப்பட்டு உரிய சரிபார்த்தல்கள் செய்யப்பட்டு அதற்குரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக இரண்டு வருட காலம் அளவில் எடுத்திருந்ததுடன், இவ்வாறான பாடநெறியொன்றின் கல்வி மட்டத்தை எமது நிறுவனத்திற்கு தயாரிக்க முடியாதிருந்ததுடன், அதனை தயாரித்தல் மற்றும் அங்கீகரிக்கும் அதிகாரம் தேசிய பயிலுனர், தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபைக்கும் அதற்குரிய அமைச்சுக்கும் உரித்தானதாக இருந்தது. உரிய பாடநெறியை அமுல்படுத்துவதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஒன்றாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான பாடநெறிகளில் சகல பிரிவுகளையும் மேவுகை | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யக் கூடிய வகையில் கல்விசார் பதவியணியினரின் தேவை போதியளவில் காணப்படாதிருந்ததுடன், அதற்காக தேவையான வளங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் இந்த பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், உரிய அங்கீகாரம் கிடைத்தன் பின்னர் அதனை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (உ) | தரப்படுத்தல் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது 06 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் ரூபா 47,101,187 செலவில் புதிய உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஆய்வுகூடங்களை பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தரச்சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்தது. | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் நலிவுகளாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதில் குறிப்பிடப்பட்ட முறையில் நிதி ஏற்பாட்டை Accreditation தராதரப்படுத்தல் செயற்பாட்டிற்கு அல்லாத நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி, பயிற்சி செயற்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகளுக்காக தேவையான ஆய்வு கூட உபகரணங்கள் மற்றும் வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்டதாகும். Accreditation தரத்தை பெற்றுக்கொள்ளல் மிகவும் நீண்ட செயற்பாடாகவும் மற்றும் அதற்கான தேவையான அநேகமான விடயங்கள் எங்களினால் வழங்க வேண்டியிருந்ததுடன், பேராசிரியர் உபாலி சமரஜீவ அவர்களின் ஆலோசனையில் 2016 ஆம் ஆண்டில் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு சிலவற்றிக்காக இந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |

போது பேராசிரியரினால் செயற்திட்டத்திற்கான அறிக்கையொன்று 06 மாதங்களில் அமுல்படுத்தும் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அந்த காலத்தில் உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேவையான நிதி ஏற்பாடோ அல்லது மனித வளங்களோ எங்கள் நிறுவனத்தில் காணப்படாதிருந்தமையினால் அந்த செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தது.

இலங்கை மற்றும் ஜேர்மனுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் ஜேர்மன் அரசாங்கத்தின் PTB நிறுவனத்தினால் (Physikalisch-TechnischeBundesanstalt-the national metrology institute of the Federal Republic of Germany, with scientific and technical service tasks) தேவையான ஆலோசனைச் சேவைகள் மற்றும் பயற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பொருள் ரீதியான உதவிகளை வழங்கி இது வரையும் Accreditation தரம் பெற்றுக்கொள்வதற்காக குறித்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக்குவதற்காக உதவி அளிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் சில பகுப்பாய்வுகளுக்காக Accreditation பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய அமைச்சின் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தி தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 07 உணவு வகைகளில் 04 வகையான உலோகங்கள் உள்ளடங்கிருந்ததா என பரீட்சிப்பதற்கு அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,956,120 செலவினம் ஒன்றைச் செய்து தெரிவாக 500 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்குரிய செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் சில உணவுப் பொருட்களில் ஆகக் கூடிய பாதுகாப்பு மட்டத்தை விஞ்சி Cadmium, Arsenic and Leaf போன்ற உலோகங்கள் உள்ளடங்கியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் முடிவு மற்றும் இந்த அறிக்கையின் தீர்வு மற்றும் முன்மொழிவின் பிரகாரம் உலோகங்கள் உள்ளடக்கப்பட்ட உணவு பொருட்கள் தொடர்பாக மேலும் பரிசோதனையொன்று நிறுவனத்தினால் மேற்கொண்டு அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினருக்கும் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான தகவல்கள் வழங்கப்படாமையின் காரணமாக ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டத்தை திட்டமிடும் போது இரண்டு வருடங்களில் தெரிவாக 1000 பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இரண்டாவது ஆண்டிற்காக விவசாய அமைச்சினால் பணம் வழங்கப்படாமையின் காரணமாக 500 தெரிவு பகுப்பாய்வுகளின் பின்னர் இறுதி அறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்கள் தொடர்பாக அல்லது அவற்றை கட்டுப்படுத்துதல் தொடர்பாக தேசிய அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ நிறுவனத்திற்கு அதிகார பலமொன்று காணப்படாமையினால் எங்கள் நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட "Awareness creation for Public Health Inspectors on using improved postharvest technologies for food safety" செயற்திட்டத்தின் உரிய பெறுபேற்றின் அடிப்படையில் அவை உணவு பாதுகாப்பிற்கு தாக்கமளித்த முறை தொடர்பாக நாடு முழுவதும் வெளிப்படுத்துகின்ற வகையில் பொது சுகாதார பரிசோதகர் உத்தியோகத்தர்களுக்கு (PHI) அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் 2019 திசெம்பர் மாதம் 19 மற்றும் 20 இரு தினங்களிலும் | அறிக்கையின் முடிவு மற்றும் முன்மொழிவின் பிரகாரம் உலோகங்கள் உள்ளடங்கிய பொருட்கள் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையினால் பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினர்களுக்கும் சரியான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடாத்தப்பட்ட ஆராய்ச்சி மாநாட்டின் போது எமது நிவனத்தின் உத்தியோகத்தர்களினால் இது தொடர்பாக ஆராய்ச்சி பத்திரமொன்று வெளியிடப்பட்டிருந்தது. | |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது ஆய்வுகூட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 15,216,575 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வருடாந்தம் ரூபா 275,000 பராமரிப்பு செலவினம் ஒன்றை செய்து முழுமையான வளிப்பதனாக்கி நிலைமையை பேணிச் செல்கின்ற Gas chromatograph Mass Spectrometer இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கின்றோம். எவ்வாறாயினும் இவ்வாறான உபகரணத்தை குறித்த பிரகாரம் பராமரிக்க வேண்டியிருந்தமையினால் வருடாந்தம் சேவை உடன்படிக்கையின் பிரகாரம் தவணை சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த உபகரணத்தில் பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது அதற்குத் தேவையான இரசாயன பொருட்கள் போன்றவற்றை கொள்வனவு செய்தல் கடந்த ஆண்டுகளின் போது தாமதமடைந்திருந்தமையினால் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளும் தாமதமாகியிருந்தன. இந்த இயந்திரம் தற்போது ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | உரிய சொத்துக்களை ஆகக் கூடிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் பெறுகை கைநூலின் 3.8 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா மூன்று மில்லியனுக்கு மேற்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டியாளர் | மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்குரிய மதிப்பீட்டை தயாரித்ததன் பின்னர் ஏற்பட்ட கொவிட் தொற்று நோயின் காரணமாக | 2006 இன் பெறுகைகள் கைநூலின் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| கேள்வி முறைமை ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும், ரூபா 3,956,916 தொகையான Freezer dryer உபகரணம் மற்றும் ரூபா 3,800,000 பெறுமதியான Texture Analyzer உபகரணம் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக விலை ஒப்பீட்டு முறைமை ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | இறக்குமதி பொருட்களின் விலைகள் உயர்வடைந்து செல்வதினால் இவ்வாறான தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வுனவு செய்யும் போது அந்த உபகரணங்கள் உயர் தரத்தில் உயர் நிலையில் வழங்கக்கூடிய இயலுமை இனங்காணப்பட்டு பொருத்தமான மூன்று வழங்குனர்களிடம் மாத்திரம் ஒப்பீட்டு விலை முறைமையின் கீழ் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. அந்த கூறுவிலை கோரலின் அடிப்படையில் பெறுமதி அதிகரித்தமையினால் திணைக்கள பெறுகைக் குழுவின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.<br>ii. ஆராய்ச்சிகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கு தேவையாக இருந்தமையினால் ஏற்பட்டிருந்த கொவிட் தொற்று நோய் நிலைமையின் இடையே சமர்ப்பிக்கப்பட்ட ஒரே ஒரு கேள்வியில் இந்த உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.<br>iii. கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சரியானது என்பதை ஏற்றுக் கொள்வதுடன், எதிர்கால பெறுகை நடவடிக்கைகளின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ரூபா ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட பொருட்களை கொள்வனவு செய்யும் போது வழங்குனர்களுடன் தேவையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளரை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 41 பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 14 உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அமைய ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |